# Siddhargal Thiruvadi e-Newsletter

"SERVICE TO SOUL IS SERVICE TO GOD"

*(This is a spiritual bi-monthly private circulation, not for sale and completely free of cost )*

**Issue : 04 : 2024**
**MAY 01 - 15, 2024**

Regd No. 117/2023 under Indian Trusts Act, 1882, Indian Income Tax Act, 1977 and NGO Darpan No. TN/2023/037227

24-A, 1ST MAIN ROAD, TROPICAL AVENUE, VEDHACHALAM ST, RAGAVENDHRA NAGAR,

## இந்த இதழில்...


- எனது பயணம்...
- முதலிரவு அறைக்குள் எழுந்த ஞானம் - காஞ்சிபுரம் பொட்டி சித்தர்
- வாழும் சித்தர் - நெல்லூர் பாபா
- சித்தர் பாடல் - சிவ வாக்கியர்
- மகான் ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகள் - வாழ்க்கைச் சரிதம் - பாகம் 2
- மே (01-15) மாத குருபூஜை தகவல்கள்
- அன்னதான நன்கொடையாளர்கள்
- தகவல் பலகை
- நல்வழி அறிவோம்


**Editor**
Siddhargal Thiruvadi "Gunnu"
**Co-Editor**
S. SuryaNarayanan
**Contact Mobile**
+91 8438238921
**E-mail**
siddhargalthiruvadisevatrust@gmail.com
**Website**
www.siddhargalthiruvadi.com



## எனது பயணம்....

*வணக்கம். சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் சார்பாக வெளியிட்ட கடந்த மூன்று மின் செய்தி மலர்களையும் படித்துவிட்டு அனைவரும் மிகுந்த சந்தோஷத்தில் எனக்கு அலைபேசியின் மூலமாக வாழ்த்து தெரிவித்து ஊக்கப்படுத்தியமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.*

*கடந்த வாரம் எனது நண்பர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் மூலம் நான் கற்ற படிப்பினையை அவருடைய அனுபவமாகவே உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். ஒரு பாத அழுத்த சிகிச்சை (Reflexology) நிபுணரிடம் சிகிச்சை பெறுவதற்காக நண்பர் சென்றுள்ளார். சிகிச்சை தருபவர் சுமார் 65 வயதிற்க்கும் மேற்பட்டவராகவும் மிகுந்த அனுபவம் பெற்றவர் போன்றும் தோற்றமளித்துள்ளார். பொதுவாகவே, ஒரு சிகிச்சை மேற்கொள்ளும் பொழுது கடந்த கால வியாதிகள், அதற்காக எடுத்துக்கொண்ட மருந்து மாத்திரைகளைப் பற்றி சிகிச்சை தருபவர் அறிந்து கொள்வது இயற்க்கைதானே. அது போல எண்ணி எனது நண்பரும் தனது கடந்தகால இதய நோய் பற்றி அவரிடம் விரிவாக விளக்கத் தொடங்கியுள்ளார்.*


*2014ஆம் ஆண்டில் அவருக்கு ஏற்பட்ட இதய நோய் முதல் அதற்கு 2023 வரை தான் தொடர்ந்து எடுக்கும் மருந்து மாத்திரைகளின் விபரங்களையும், என்ன மாதிரியான மருத்துவ பரிசோதனைகள் எடுக்கப்பட்டது, அந்த பரிசோதனையின் இன்றைய நிலை (Medical Lab Test Status) போன்ற விவரங்கள் யாவும் சொல்லிக்கொண்டு வந்தார். பிறகு நண்பர் தன்னுடைய இதய நோய்க்கு முன்பு, தான் மிகச்சிறந்த வணிகம் செய்து வந்ததாகவும், தற்பொழுது அதனை நிறுத்தி விட்டாதாகவும், தனது ஆத்ம திருப்திக்காக கடந்த 3-4 வருடங்களாக இறை வழிபாட்டை மேற்கொண்டு வருவதாகவும் வைத்தியரிடம் சொல்லியிருக்கிறார்.*

*உடனே, அந்த வைத்தியர் இடைமறித்து, நீங்கள் வணங்கும் கடவுள் உங்களுக்கு ஏன் இதய நோய்யை கொடுத்தார் என்று அவரிடம் கேட்டீர்களா? சரி. நோய்யை கொடுத்த அந்த இறைவன், கடந்த 10 வருடங்களாக ஏன் அந்த நோயை முழுமையாக குணப்படுத்தவில்லை? என்றிருக்கிறார். அப்போது தான் நண்பருக்கு புரிந்தது அவர் ஒரு முழு நாத்திகவாதி என்று. அதன் பிறகு, அவர் தனது கைப் பைக்குள் இருந்த ஒரு செய்திதாளில் முருகன் படத்தை எடுத்து கீழே எறிந்து, நான் இதையெல்லாம் நம்புவதில்லை என்றிருக்கிறார் (கடவுளை வெறுக்கும் அவருடைய கைப்பைக்குள் முருகன் பட செய்திதாள் எப்படி வந்தது? என நண்பருக்கும் மட்டுமல்ல எனக்கும் விளங்கவில்லை). உடனே வைத்தியர் தன்னை ஒரு மிகப்பெரிய அறிவு ஜீவி என்று நினைத்துக் கொண்டு அவருக்கு தெரிந்த Conscious Mind, Sub-Conscious Mind போன்றவற்றுக்கெல்லாம் அவரது தவறான புரிதல்களை, தன்னிடம் வரும் வியாதிகாரர்களிடம் எதை சொன்னாலும் கேட்டுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் தனக்கு தெரிந்தவைகளை எல்லாம் நண்பரிடம் வாந்தி எடுத்துக்கொண்டிருந்தார். அதற்க்கு நண்பர், உங்கள் வார்த்தைகளுக்கு உண்மையான பதிலை நான் சொல்ல ஆரம்பித்தால் உங்கள் மனம் கஷ்டப்படும் அதனால் நாம் வைத்தியத்தை மட்டும் பார்க்கலாம் என்று வெளிப்படையாக சொல்லியதும் அவருக்கு புரிந்து போயிற்று. நண்பரும் இனி அந்த தற்குறியிடம் இருந்து தன்னை தரம் தாழ்த்திக்கொள்ள விரும்பாமல் அந்த சம்பாஷணையை முடித்துக்கொண்டார்.*

*இப்படித்தான் சிலர், இந்த உலகில் நாம் எதற்காக பிறப்பெடுத்தோம், தன்னுடைய வாழ்க்கையின் ஜனன காரியங்கள் என்னென்ன என்பதனை தெரிந்துகொள்ளாமல். சில மூடர் கூட்டங்கள் ஆன்மீகத்தையும் அறிவியலையும் நுனிப்புல் மேய்ந்துவிட்டு தானும் வாழத்தெரியாமல் அடுத்தவர்களையும் வாழவிடாமல் கெடுத்து திரிசங்கு மடம் போல் அலைந்துகொண்டு இருக்கிறார்கள். இவர்களை திருத்துகிறேன் என்ற பெயரில் உங்கள் வாழ்வை பலிகொடுத்துக் கொள்ளவேண்டாம். முட்டாள்களைக் கூட திருத்திவிடலாம் ஆனால் இந்த மூடர்களைத் திருத்தவே முடியாது. இவர்களிடம் இருந்து நாம் சற்று முன் எச்சரிக்கையோடு தூரத்தில் தள்ளி இருக்கவேண்டும். மீண்டும் அடுத்த பதிவில் உங்களோடு பயணிக்க வருகிறேன்...*

*அன்புடன் – உங்கள்*
*சித்தர்கள் திருவடி குன்னு*

## முதலிரவு அறையில் ஞானம் பெற்ற... பொட்டி சாமி (எ) பிரம்மானந்த சுவாமி



தமிழகத்தின் கோவில்கள் நகரம் என்றால் கும்பகோணத்திற்கு அடுத்து காஞ்சிபுரத்தை தவிர வேறு எந்த ஊரையும் குறிப்பிட முடியாது. அந்த அளவிற்க்கு கோவில்களை கொண்ட நகரம் காஞ்சிபுரம், காமாட்சி கோவிலை அடுத்து ஏகாம்பரேஸ்வரர், வழக்கறுதீஸ்வரர், கைலாசநாதர், கர்ச்சபேஸ்வரர், வரதராஜ பெருமாள், சித்ரகுப்தர் மற்றும் சஞ்சீவராயர் இப்படி வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். இங்கே ஆலயங்களுக்கு இணையாக பல சித்தர்களின் ஜீவ பீடங்களும் உள்ளன. போடா சாமி (எ) சிவசாமி சித்தர், பதினெண்கீழ் சித்தர்களில் ஒருவரான கடுவெளி சித்தர், கோவிந்தசாமி சித்தர், அஸ்தலிங்க சித்தர் என்ற வரிசையில் பொட்டி சித்தர் என்கிற பிரம்மானந்த சித்தரின் வாழ்க்கை வரலாற்றை பற்றி இனி காண்போம்.

### இளமைபருவம்

காஞ்சி-மாநகரிலிருந்து சுமார் 5 கி.மீ தொலைவில் உள்ள முத்தியால்பேட்டை என்ற கிராமத்தில் முத்து செட்டியார் மற்றும் போடியம்மாள் தம்பதியருக்கு "பொட்டி செட்டியார்" என்ற திருநாமத்தில் 1824ஆம் ஆண்டு பார்த்திப வருடம் சித்திரை திங்கள் பதினோராம் நாள் வியாழக்கிழமை அன்று சுவாமிகள் பிறந்தார். எல்லா குழந்தைகளைப் போலவே, சுவாமிகளும் பள்ளிப்படிப்பை மிகவும் ஆர்வத்துடன் சென்று படிக்கலானார், அதுவும் சிலகாலம் வரைதான் சாத்தியமாயிற்று. பின்பு அவரது குடும்ப தொழிலான நெசவு தொழிலை மேற்கொள்ள தொடங்கினார்.

பொட்டி செட்டியாருக்கு தினமும் காலை மாலை இருவேளையும் நீராடி, திருநீர் பூசி, சிவபூஜை செய்வதில் ஆர்வம் அதிகரித்தது. இவர் பல நூல்கள் படித்திருப்பினும் "ஒழிவில் ஒடுக்கம்" என்னும் நூல் மீது தீராத காதல் ஏற்பட்டு அந்த நூல் முழுவதையும் இரவு பகல் என பாராது பாராயணம் செய்து எப்பொழுதும் அந்த சிந்தனையிலேயே இருக்கலானார். இதன் காரணமாக பொட்டி செட்டியார் ஆன்மீகத்தின் பக்குவநிலையை வாய்க்க பெற்றவாறாக விளங்கினார்.

### திருமண வாழ்க்கை

பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பால்ய விவாகம் என்பது கொடிகட்டி பறந்த காலமாகும். அந்நாளில் நமது பொட்டி செட்டியாருக்கு பருவம் அடையாத பெண்ணை இவரது குடும்பத்தினர் மணம்முடித்து வைத்தனர். இவருக்கு திருமணம் ஆகி இரண்டு ஆண்டுகளுக்கு பிறகே, இவரது மனைவி பூப்பெய்தி உள்ளார். பிறகு அந்நாளைய சம்பிரதாயபடி சாந்தி முகூர்த்த ஏற்பாடுகள் தடல்புடலாக நடந்துகொண்டு இருந்தன. எல்லா ஏற்பாடுகளும் முடிந்த நிலையில் மணமகனை தேடிபார்த்தபோது தான் தெரிந்தது. பொட்டி செட்டியார் சாந்தி முகூர்த்த அறைக்குள் சென்று மணமகளை பார்த்தவுடன் உடனடியாக அறையை விட்டு வெளியேறிவிட்டார்.

### முறிந்து போன முதலிரவு

முதலிரவு அறையை விட்டு வெளியேறிய மணமகனை பெற்றோர்களும், உறவினர்களும் விடியவிடிய அந்த ஊர் முழுக்க தேடிப்பார்த்தும் எங்கும் கிடைக்கவில்லை. தொடர்ந்து, விடிந்த பொழுதும் அனைவரும் தேடிக்கொண்டே இருந்தனர். ஆனால் அதிகாலை சேனியர் வீதிக்கு மேல்கோடியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் சன்னதியின் அருகே இருந்த ஒரு இலுப்பை மரத்தின் அடியில் ஆழ்ந்த தியான நிலையில் இருந்ததை கண்டு அனைவரும் அலறிவிட்டனர். முதலிரவு முடிந்து இன்ப வாழ்க்கையில் திளைக்க வேண்டிய பொட்டி செட்டியார் இப்படி கண்களை மூடிக்கொண்டு சாமியார் போல தியானத்தில் இருக்கிறாரே என்று அவரது எதிர்கால இல்லற வாழ்க்கையை கண்டு பெற்றோர்கள் அஞ்சினர். மாப்பிள்ளை கோலத்தில் இருந்தவர் உடைகளை எல்லாம் கலைந்து விட்டு வெறும் கோவணத்துடன் காட்சி தந்தது அனைவர் மனதையும் களங்கச் செய்தது. பெற்றோருக்கோ பெண் வீட்டாருக்கு என்ன பதில் சொல்லப்போகிறோம் என்ற கவலை வேறு.

### பொட்டி செட்டியார் "பொட்டி சித்தர்" ஆன கதை

அங்கு நடக்கும் எதையும் பொருட்படுத்தாமல் பித்துப் பிடித்தவற்போல அங்கும் இங்கும் உலவ ஆரம்பித்தார். பெற்றோர்களும் உறவினர்களும் இவர் மனதை மாற்ற எவ்வளவோ முயற்சி செய்தும் எவ்வித பலனும் அளிக்கவில்லை. அனைத்து முயற்சிகளும் வீணாயின. இப்படி அனைவரது கண்களுக்கும் பித்தராகவும் நலம் பாதித்தவர் போன்ற செய்கைகளாக இருந்தாலும். தன்னளவில் ஆத்மஞானம் பெற்ற பரமானந்த சொரூபியாய் அங்கும் இங்கும் தெருக்களில் அலைந்துகொண்டிருந்தார்.

ஒரு சமயம் அந்நாளைய ஆங்கிலேய துரை சப்-கலைக்டராக குதிரைமேல் சவாரி செய்து வரும்பொழுது அங்கே கோவணத்துடன் அலைந்த பொட்டி சித்தரை பிரம்பால் அடிக்க கையை ஓங்கும் வேளையில் தூக்கிய கை தூக்கியபடியே நின்றது. அப்பொழுது ஆங்கிலேயதுரை மட்டும் அல்ல அவ்வூர் மக்கள் அனைவரும் பயந்து சுவாமிகளின் மகிமையை உணர ஆரம்பித்தனர். பின் ஆங்கிலேய துரை மன்னிப்பு கேட்டதும் அவரது கை இயல்பு நிலைக்கு திரும்பியது.

**சித்த நிலை**

சுவாமிகளுக்கு இருப்பிடம் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது எங்கு தோன்றுகிறதோ அங்கு வாசம் செய்வார். தேவையான அளவு உணவை கேட்டுவாங்கி சாப்பிடுவார். இடையில் கோவணத்தை தவிர வேறு எந்த ஆடைகளையும் அவர் அணிந்ததில்லை. அனுதினமும் அருகிலுள்ள வாய்க்கால் மற்றும் குளத்தில் நீராடி அப்படியே தலை துவட்டாமல் நடந்தே செல்வராம். அநேக நாட்களில் அய்யன்பேட்டையில் உள்ள அஸ்தலிங்கசாமி மடத்தில் தான் தங்குவார். அங்கே சில நேரங்களில் அவரது உடல் உறுப்புக்கள் ஒன்பது துண்டுகளாக (நவகண்ட யோகம்) தனிதனியாக இருப்பதை கண்டு பலர் பயந்தே போயிள்ளனர். சிறிது நேரத்திற்க்கு பிறகு அவரது உடல்கள் ஒன்றாக சேருவதை கண்டு பலர் அதிசயித்துள்ளனர்.

**சித்து விளையாட்டு**

பொட்டி சித்தருக்கு மூக்குபொடி போடும் பழக்கம் உண்டு. பக்தர்கள் சுவாமியிடம் பொடி மட்டையை நீட்டினால் ஒரே ஒரு சிட்டிகை மட்டும் எடுத்து போட்டுவிட்டு போய்க்கொண்டே இருப்பராம். பொடி மட்டையை முழுதும் யாராவது கொடுத்தல் ஒரு சிட்டிகை மட்டும் எடுத்துக்கொண்டுவிட்டு மீதியை தூக்கி வீசி விடுவாராம். பலசரக்கு கடைகளில் நுழைந்தாள் வெள்ளம் மற்றும் கடலையை இவர் விரும்பி எடுத்து வாயில் போட்டுக்கொள்வாராம். அந்த நேரத்தில் வீதியில் ஏதாவது ஒரு குழந்தையை பார்த்துவிட்டால் கையில் இருப்பதை அப்படியே அந்த குழந்தைகளிடம் கொடுத்து விடுவாராம். அப்படி எடுக்கும் கடைகளுக்கு அன்று வியாபாரம் அமோகமாக நடக்குமாம்.

**மகா சமாதி**

பொட்டி சித்தரின் பிரம்மானந்த நிலையை கண்டு சிவனடியர்களும், சித்தனடியர்களும் துறவிகளும் இவரை வணங்கி செல்வார்கள். இவரை வணங்கி செல்லும் அனைவரது வாழ்வில் வளங்களும் சுபிட்சங்களும் பெற்றவர்கள் ஏராளம். 1915 ஆம் ஆண்டு இராட்சச வருடம் சித்திரை மாதம் 29ஆம் தேதி ரேவதி நட்சத்திரம் அன்று சின்ன காஞ்சிபுரத்தில் உள்ள பட்டாளத் தெருவில் ஒரு வீட்டில் சுவாமிகள் சாப்பாடு கேட்டிருக்கிறார்கள். சாப்பாடு சமைக்க தாமதம் ஆனதால் ஏற்கனவே இருக்கும் கேழ்வரகு கூழை கொடுத்திருக்கின்றனர். அதனை சாப்பிட்டுவிட்டு அருகேயுள்ள தேவராஜ் சுவாமி குளத்தில் குளித்துவிட்டு அருகிலிருந்த மரத்தடியில் நிஷ்டையில் இருந்திருக்கிறார். அந்நிலையிலேயே சுவாமிகள் பரிபூரணமானர்கள்.

**சமாதி கோவில்**

முத்தியால்பேட்டை மக்கள் யாவரும் சின்ன காஞ்சிபுரத்திலிருந்து சுவாமியை அய்யன்பேட்டையில் உள்ள அஸ்தலிங்க சுவாமி மடத்தில் வைத்து அபிஷேகம் செய்யப்பட்டு, பின்பு புஷ்ப பல்லக்கில் முத்தியால்பேட்டையில் ஒரு இடத்தி தேர்வு செய்து, அதில் ஒரு சிறிய ஆலயம் அமைத்து, அங்கிருந்த இலுப்பை மரத்தடியில், சுவாமியை மகா சமாதி செய்து அதில் சிவலிங்க பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் ரேவதி நட்சத்திரத்தில் சுவாமிகளுக்கு மகா குருபூஜை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வரும் 06.05.2024 சித்திரை திங்கள் 23ஆம் நாள் சுவாமிகளின் 109வது குருபூஜை மிக விமர்சியாக கொண்டாடப்பட உள்ளது. நீங்கள் அனைவரும் இந்த குருபூஜை விழாவில் கலந்து கொண்டு பொட்டி சித்தரின் அருளாசியை பெறவேண்டுமாய் சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை உங்களை இருகரம் கூப்பி வணங்கி கேட்டுக்கொள்கிறது.

(Courtesy: Shri. Veerapadhran, Divotee, Potti Siddhar, Kanchi)

## சித்தர் பாடல்

*“என்னிலே இருந்த ஒன்றை*
*யான் அறிந்தது இல்லையே*
*என்னிலே இருந்த ஒன்றை*
*யான் அறிந்துகொண்டபின்*
*என்னிலே இருந்த ஒன்றை*
*யார் காண வல்லரோ*
*என்னிலே இருந்திருந்து*
*யான் உணர்ந்து கொண்டேனே.”*

*– சிவவாக்கியர்*

எனக்குள்ளே ஒன்றான மெய்ப்பொருளாக இறைவன் இருக்கின்றான் என்பதை நான் முன்பு அறிந்து கொள்ளவில்லை. அப்பரம்பொருளை பல இடங்களில் தேடியும், நல்ல நூல்களைப் படித்தும், நல்லோரிடம் பழகியும், நல்ல குருநாதர் மூலம் அது என்னிடமே இருப்பதை யான் அறிந்து கொண்டேன். தனக்குள் இருந்த உயிரை அறிந்து அதனுள் இருக்கும் ஈசனை யார் காண வல்லவர்கள். என்னிலே இருந்த அந்த மெய்ப்பொருளை அறிந்து அதையே என் உள்ளத்தில் இருத்தி தியானத்தில் இருந்து, இருந்து அந்த உண்மையை யான் உணர்ந்து கொண்டேன்.

## தகவல் பலகை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், யாத்ரா நிவாஸ் அருகேயுள்ள நால்வர் ஜீயர் சமாதியில் தங்கி நமக்கெல்லாம் அருளாசி வழங்கிக்கொண்டிருக்கும் வாழும் பெண் சித்தர் **“ஸ்ரீ கோட்டா ராணி மாதாஜி”** தற்பொழுது நேபாள நாட்டிற்கு சென்றுள்ளார்.

அவர் மீண்டும் ஜீயர் சமாதிக்கு திரும்பி வரும் தேதி இதுவரை அறிவிக்கப்படவில்லை. அவர் மீண்டும் ஜீயர் சமாதி திரும்பியவுடன் சித்தர்கள் திருவடி மின் செய்திமலரில் உடனடியாக செய்தி வெளியிடப்படும். அதுவரை யாரும் நால்வர் ஜீயர் சமாதிக்கு சென்று மாதாஜியை தரிசனம் செய்ய வீணாக காத்திருக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம்.

**- சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை**

## வாழும் சித்தர்கள் — *Living Siddhars*




### நெல்லூர் பாபா (எ) எக்மோர் பாபா

நெல்லூர் பாபா அல்லது எக்மோர் பாபா என்று அனைவராலும் அழைக்கப்படும் இந்த வாழும் சித்தர் இரண்டு இடங்களிலிருந்தும் நம் அனைவருக்கும் தரிசனத்தையும், ஆசீர்வாதத்தையும் வழங்கிக் கொண்டு இருக்கிறார். பொதுவாக வாழும் சித்தர்கள் பலர் தனது இருப்பு நிலை தெரியாமல் (conscious state) இருப்பார்கள், அதனை நம்மைப்போல் சராசரி மக்களால், அவர்களின் ஜனன தத்துவத்தின் ரகசியத்தை அறிய வாய்ப்பில்லை. அதனால் தான் இவர்களை கண்ட அடுத்த கணம் இவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர் அல்லது பைத்தியம் பிடித்தவர் என்ற ஒரு முடிவுக்கு நாம் உடனேயே வந்துவிடுகிறோம். கிருதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகங்களில் நாம் கண்ட, படித்த மற்றும் கேட்ட சித்தர்களின் வாழ்வியல் நிலை வேறு, கலியுகத்தில் வாழும் சித்தர்களின் நிலை வேறு. அதனை நாம் அனைவருக்கும் புரிந்து கொண்டால் ஆன்மீகம் நமக்கு மிக எளிதில் புரிந்துவிடும்.

சரி. நாம் நெல்லூர் பாபாவை பற்றி பார்ப்போம். இவர் பார்பதற்க்கு மிக எளிய மனிதராகவே இருப்பார். நீண்ட தாடியுடன், நம்மோடு இயல்பாக, வட்டார வழக்கு மொழியான தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளிலும் நம்மோடு உரையாடுவார். உங்களது குறைகளை அவர்களிடம் தாராளமாக சொல்லலாம். அவர் வர்மக்கலையின் ஒரு அங்கம் போன்று உங்கள் உடலில், குறிப்பாக முதுகில் ஒரு இடத்தில் தட்டி எழுப்புவார். அது உங்கள் கர்ம வினைகளை அழிக்கும் அல்லது வினையருக்கும் சம்பவமாக இருக்கும். அவர் ஆன்மீக சேவைக்காக யாரிடமும் பணம் எதுவும் பெறமாட்டார். நீங்கள் அன்பாக அவருக்கு அருகே இருக்கும் தேநீர் கடையில் சாப்பிட ஏதாவது ஒன்றை வாங்கி தந்தால், அதில் பாதியை சாப்பிட்டுவிட்டு மீதியை உங்களுக்கே திருப்பி பிரசாதமாக தந்துவிடுவார். நீங்கள் கீழ்க்கண்ட முகவரியில் அவரை தரிசித்து ஆசி பெற சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை உங்களுக்காக பிரார்த்தனை செய்து கொள்கிறது.

முகவரி :
Osian Juice & Tea Stall Entrance
Old commissioner office bus stop
Panthiyan Road (Roundtana)
Egmore, Chennai – 600008

For more information and google map
https://siddhargalthiruvadi.com/living-siddhars-tamil-nadu/

| மே மாதம் (01-15), 2024 சித்தர்கள் குருபூஜை நாள் அட்டவணை | | | | |
|---|---|---|---|---|
| எண் | தேதி | சித்தரின் பெயர் | இடம் / மாவட்டம் | குருபூஜை |
| 1 | 01.05.2024<br>சித்திரை -18 | ஓம் நாத சுவாமிகள் | ஆப்பூர்<br>செங்கல்பட்டு | 10வது குருபூஜை |
| 2 | 01.05.2024<br>சித்திரை -18 | காழி சிற்றம்பல நாடிகள் | சீர்காழி<br>மயிலாடுதுறை | மகா குரு பூஜை |
| 3 | 02.05.2024<br>சித்திரை -19 | பரஞ்சோதி மகான் | திருவொற்றியூர்<br>சென்னை | 124வது அவ. விழா |
| 4 | 02.05.2024<br>சித்திரை -19 | ராஜராஜ சுவாமி | வெல்லரை<br>காஞ்சிபுரம் | 18வது குருபூஜை |
| 5 | 03.05.2024<br>சித்திரை -20 | அரங்கநாத கவிராயர் | தாளவாய்பேட்டை<br>ஈரோடு | மகா குரு பூஜை |
| 6 | 03.05.2024<br>சித்திரை -20 | பாய்கடை குமரபாபா | வெல்லரை<br>காஞ்சிபுரம் | 11வது குருபூஜை |
| 7 | 03.05.2024<br>சித்திரை -20 | போடா சாமி (எ)<br>சிவசாமி சித்தர் | காஞ்சிபுரம் | 35வது குருபூஜை |
| 8 | 03.05.2024<br>சித்திரை -20 | விஸ்வநாத சுவாமிகள் | மருதேறி<br>கிருஷ்ணகிரி | 83வது குருபூஜை |
| 9 | 04.05.2024<br>சித்திரை -21 | இராமானந்த சுவாமிகள் | சுமைதாங்கி<br>இராணிபேட்டை | 24வது குருபூஜை |
| 10 | 05.05.2024<br>சித்திரை -22 | பிச்சை சுவாமிகள் | குஞ்சனம்பட்டி<br>திண்டுக்கல் | 03வது குருபூஜை |
| 11 | 06.05.2024<br>சித்திரை -23 | பொட்டி சித்தர் | முத்தியால்பேட்டை<br>காஞ்சிபுரம் | 109வது குருபூஜை |
| 12 | 07.05.2024<br>சித்திரை -24 | காங்கேய சித்தர் | நாகூர்<br>நாகப்பட்டினம் | மகா குரு பூஜை |
| 13 | 10.05.2024<br>சித்திரை-27 | வண்ணார பரதேசி சுவாமிகள் | வில்லியனூர்<br>பாண்டிச்சேரி | மகா குரு பூஜை |
| 14 | 11.05.2024<br>சித்திரை-28 | ஆண்ட்ரூஸ் பாபா | எல்லிஸ் நகர்<br>மதுரை | 02வது குருபூஜை |
| 15 | 14.05.2024<br>வைகாசி -01 | நேரு சுவாமிகள் | மாடகுளம்<br>மதுரை | 14வது குருபூஜை |

# பாடகச்சேரி இராமலிங்க சுவாமிகள் நிகழ்த்திய அற்புதங்கள் - பாகம் 2



### இறந்தவர்கள் உயிர்பெற்ற சம்பவங்கள்

மகான் ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகள் ரசவாதம் மற்றும் நவகண்ட யோகம் அறிந்தவர். ஆழ்ந்த தியான நிலையில் மூழ்கி இருக்கும் போது ஞான சித்தர்களின் கை கால் போன்ற உடல் உறுப்புகள் ஒன்பது தனித்தனி பாகங்களாக பிரிந்து காணப்படும். இதையே நவகண்ட யோகம் என்று குறிப்பிடுவார்கள். சிறு கல்லை கையில் எடுத்து மூடி பிறகு தங்கமாகவும், நவரத்தினமாகவும் மாற்றிக் காட்டியுள்ளார் பாடகச்சேரி சுவாமிகள். ஒரே சமயத்தில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் இவர் காணப்பட்டுள்ளார் என்று பலரால் உறுதி செய்யப்பட்டுள்ளது. பாடகச்சேரி கிராமத்தில் இறந்துபோன இரண்டு அல்லது மூன்று பேரை உயிர்பித்துள்ளதாகவும், இந்த சம்பவம் கதையல்ல உண்மை என்ற ஆதாரத்தை காட்டுகிறார்கள் பாடகச்சேரி ஊர் மக்கள். நோயின் கொடுமையால் இறக்கும் நிலையில் இருந்தவர்களை தனது தவ வலிமையினால் மருத்துவர்களே வியக்கும் வண்ணம் அவர்களை காப்பாற்றியுள்ளார். பிறகு அவர்கள் பல ஆண்டுகள் உடல் நலத்துடன் வாழ்ந்துள்ளார்கள்.

### அரிசி கஞ்சி மாரடைப்பு மருந்தானது

பாடகச்சேரி சுவாமிகளின் தீவிர பக்தரான திரு. ராமசாமி பிள்ளை என்பவருக்கு சுமார் 1930 ஆம் ஆண்டு வாக்கில் மாரடைப்பு நேரிட்டது. அந்த கால கட்டத்தில் மிகவும் புகழ்பெற்ற மருத்துவரான டாக்டர் திரு. குருசாமி முதலியார், டாக்டர் திரு. என். எஸ். நரசிம்ம அய்யர் மற்றும் எலும்பு நோய் நிபுணர் ஆகியோர் திரு. ராமசாமி பிள்ளையின் சிகிச்சைக்குப் பிறகு அவர் இருக்கும் இடத்தை விட்டு கொஞ்சம் கூட நகரக் கூடாது என்று மருத்துவர்கள் அறிவுறுத்தினார்கள். அந்த பக்தரின் வீடு தேடி வந்த மகன் ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகள் அவருக்கு சூடான கஞ்சி கொடுத்து குடிக்கச் சொல்லி எழுந்து நடமாடும் படி கட்டளையிட்டுள்ளார். யாரும் நம்ப இயலாதபடி திரு. பி ராமசாமி பிள்ளையின் மாரடைப்பு நோய் குணமாகி வழக்கம் போல் அவர் செயல்பட்டார்.

### கொடிய நோய் காணாமல் போன மாயம்

திரு. ஏ ஜி சாமன்னா பெங்களூரில் பெரும் தனவந்தர், மொத்த துணி வியாபாரம் செய்து வந்தார். இவர் குணப்படுத்த இயலாத கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு மரணத்தின் பிடியில் நாட்களை கடத்தி வந்தார். பெரும் மருத்துவர்களால் கூட இனி இவர் உயிர் பிழைக்க இயலாது என கைவிட்டு விட்டார்கள். அந்த சமயம் மகான் ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகள் திடீரென்று பெங்களூரில் உள்ள திரு. சாமன்னா வீட்டுக்கு வருகை தந்தார். மருந்து மந்திரம் எதுவுமே இல்லாமல் தனது கைகளால் அவரது உடலைத் தடவினார் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நோய் குறைய தொடங்கியது. அவர் முற்றிலும் குணமடைந்து பிறகு பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். தனது வணிகத்தை மொத்தமாக கை விட்டு விட்டு மகான் ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகளுடன் ஐக்கியமாகி, 1949 ஆம் ஆண்டுகள் சுவாமிகள் சித்தியடையும் வரை அவருடன் தங்கி அவரின் தீவிர பக்தராக இருந்தார்.

### சுவாமியைக் காண பைரவர்களை தூதுவிடும் பக்தர்கள்

சுவாமிகள் ஒரு இடத்தில் தங்கி இருந்தபடி அவ்வப்போது தொலைதூரம் உள்ளிட்ட பல ஊர்களுக்கு சென்று திரும்புவது வழக்கம். அதேபோல் அவருடைய பயண விபரங்கள் எதுவும் யாருக்கும் தெரியாது. தனது தீவிர பக்தர்களிடம் சுவாமிகள் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அதனால் அவர் ஊரில் இல்லாத போது தன்னை யாராவது சந்திக்க விரும்பினால் தெருவில் அலைந்து கொண்டிருக்கும் ஏதேனும் ஒரு பைரவரிடம் (நாய்களிடம்) தகவல் கூறுமாறு கேட்டுக் கொள்வார். சில நெருக்கடியான நேரங்களில் பக்தர்கள் சுவாமிகளை சந்திக்க விரும்பும்போது ஏதோ ஒரு தெரு நாயிடம் அழைத்துவரச் சொல்வார்களாம், அது உடனேயே புறப்பட்டு செல்லும் சிறிது நேரத்தில் அதே நாயுடன் சுவாமிகள் பக்தர்கள் முன்பு தோன்றி "கூப்பிட்டீர்களாமே" என கேட்பது வழக்கம்.

## நல்வழி அறிவோம்

உணவிடை நீரைப் பருகாதே!
கண்ணில் தூசி கசக்காதே!
கத்தி பிடித்துத் துள்ளாதே!
கழிக்கும் இரண்டை அடக்காதே!
கண்ட இடத்தில் உமிழாதே!
காதைக் குத்திக் குடையாதே!
கொதிக்கக் கொதிக்கக் குடிக்காதே!
நகத்தை நீட்டி வளர்க்காதே!
நாக்கை நீட்டிக் குதிக்காதே!
பல்லில் குச்சி குத்தாதே!
பசிக்கா விட்டால் புசிக்காதே!
பசித்தால் நேரம் கடத்தாதே!
வயிறு புடைக்க உண்ணாதே!
வாயைத் திறந்து மெல்லாதே!
வில்லின் வடிவில் அமராதே!
வெற்றுத் தரையில் உறங்காதே!

## ஓடிய ரயில் ஓடாமல் போனது ஏன்?

1947 ஆம் ஆண்டுக்கு முன்பு, ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் தஞ்சை மாவட்டம் நீடாமங்கலத்தில் திரு. லட்சுமண ஐயரின் காப்பி ஹோட்டலில் சுவாமிகள் தங்கியிருந்தார். தஞ்சையிலிருந்து திருவாரூர் செல்லும் ரயில்வண்டி, நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து வண்டி புறப்படத் தயாரானது. அந்த சமயம் நாகூர் திருவிழாவிற்காக ஏராளமான சாமியார்கள் கூட்டம் கூட்டமாக ரயிலில் ஏறினார்கள். அந்த ரயிலில் யாருமே டிக்கெட் எடுக்காத காரணத்தினால் ரயில்வே அதிகாரிகள் அனைவரையும் ரயிலை விட்டு இறக்கி விட்டார்கள்.

பிறகு ரயில் ஓட்டுநர் எவ்வளவு முயன்றும் வண்டி ஒரு இன்ச் கூட நகரவில்லை. இதுவரை நல்ல நிலையில் ஓடிக் கொண்டிருந்த ரயில் வண்டி சுத்தமாக நகரவில்லை. இதன் காரணத்தை அறிந்த ஒரு ரயில்வே ஊழியர் ரயில்வே அதிகாரிகளிடம் ஓடிச் சென்று சாமியார்களை இறக்கி விட்டதால் இந்த நிலை என்று சொல்லி அருகில் இருந்த காபி ஓட்டலுக்கு அவர்களை அழைத்துச் சென்று சுவாமிகள் முன்பு நிறுத்தினார். பிறகு அதிகாரிகள் சுவாமிகளிடம் மன்னிப்பு கேட்டு, அனைத்து துறவிகளையும் ரயிலில் ஏற்றிக்கொண்டு, சுவாமிகளையும் முதல் வகுப்பில் அமரச் செய்து, கொடி அசைத்தவுடன் நொடியில் ரயில் நாகூரை நோக்கி தன் பயணத்தை தொடர்ந்தது.

## சுவாமிகளின் ஆன்மீகம் மற்றும் மருத்துவ சேவை

பாடகச்சேரி மடத்தில் சுவாமிகள் பல ஆண்டுகள் தங்கி இருந்து அங்கு பைரவ பூசைகள், தியானம், அன்னதானம் மற்றும் மருத்துவப் பணிகள் செய்து வந்தார். அவ்வப்போது கும்பகோணம், தஞ்சாவூர், வடலூர், செல்லக்குறுக்கி போன்ற தொலைதூர ஊர்களுக்கும் சென்று ஆலய திருப்பணிகள், கும்பாபிஷேகம், அன்னதானம் போன்ற பணிகளில் ஈடுபட்டு வந்தார். பெரும் செல்வந்தர்களை ஆன்மீக நாட்டம் பெறச் செய்து இறைவனில் ஈடுபடுத்தி, உய்வித்து அவர்களின் நிதி உதவி மற்றும் செல்வாக்கினால் பெரிய அளவில் அன்னதானங்களும், ஆலய திருப்பணிகலையும் செய்து வந்தார்.

மகான் ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகளின் மேலும் பல சித்து விளையாட்டுகளையும் குடந்தை ஸ்ரீ நாகேஸ்வரன் திருக்கோவில் கும்பாபிஷேகத்தில் நடந்த அதிசயத்தையும் நாம் அடுத்த இதழின் தொடர்ச்சியில் காண்போம்...

(Courtesy: Shri. A.Elango,
Padagachery Ramalingaswamy Annadhana Trust)

**முன் ஜென்ம கர்மவினைகள் தீர
அன்னதானத்திற்க்கு நன்கொடை அளிப்பீர்**

சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் சாலையோர ஆதரவற்ற ஏழை-எளிய மக்களுக்கு தொடர்ந்து உணவு, உடை வழங்குவதும், பழங்கால கோவில், சித்தர்களின் ஜீவசமாதிகளுக்கு எண்ணெய் மற்றும் பூஜை பொருட்கள் வழங்குவது. மேலும் பழங்கால சிவாலயங்கள் மற்றும் சித்தர்களின் ஜீவ சமாதிகளை புனரமைக்க தேவையான பண உதவி / பொருளு தவிகளை தொடர்ந்து வழங்கி வருகிறது. மேலும் சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை மூலம் நோயற்ற வாழ்வு வாழ இயற்கை மருத்துவம் மற்றும் சித்த மருத்துவம் குறித்து விழிப்புணர்வை பொதுமக்களிடையே கொண்டு சேர்ப்பதும், மனிதப் பிறப்பின் இலக்கை அடைய நல்ல ஆன்மீக சூழலை ஏற்படுத்திட சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளை உங்களுடன் கைகோர்த்து இந்த ஆக்கபூர்வமான செயல்கள் யாவும் வெற்றியடைய தங்களின் அனைவருடைய ஆதரவையும் வேண்டி நிற்கிறது.



| இந்த மாத அன்னதான நன்கொடையாளர்கள் | | |
|---|---|---|
| எண் | பெயர் | இடம் |
| 1 | திரு. பத்மநாராயணன் ஆராவமுதன் | பெங்களூரு |
| 2 | திரு. இளவழகன் இராஜேந்திரன் | சென்னை |
| 3 | திருமதி. அஞ்சனா இராமசுவாமி | சென்னை |





## அறக்கட்டளைக்கு நன்கொடை செய்ய

| | | |
|---|---|---|
| 1 வேளை உணவு | ரூ | 80.00 |
| 1 பாட்டில் தண்ணீர் | ரூ. | 20.00 |
| 1 லி பூஜை எண்ணெய் | ரூ. | 200.00 |
| 1 மாத அபிஷேகபொருள் | ரூ. | 500.00 |
| 1 செங்கல் | ரூ. | 30.00 |
| 1 மூட்டை சிமெண்ட் | ரூ. | 450.00 |

*"GOD HAS GIVEN YOU, PLENTY…..
SPEND YOUR EXCESS EARNINGS
TO GOD THROUGH ANNADHANAM"*

********

# விளம்பரங்கள்



காஞ்சிபுரம், முத்தியால்பேட்டை
தவத்திரு. பொட்டிசாமி (எ)
பிரம்மானந்த சுவாமிகளின்
109-ஆம் ஆண்டு குருபூஜை விழா
அழைப்பிதழ்
குரோதி ஆண்டு சித்திரை திங்கள் 23 ஆம்
நாள் : 06.05.2024 திங்கட்கிழமை




உ
ஸ்ரீ வெள்ளைவிநாயகர் துணை
பாக்கியநாதன் (எ) ஸ்ரீலஸ்ரீ பிச்சை சுவாமிகள் என்ற
பொடிமட்டை சுவாமிகள் சித்தர் பீடம்
குஞ்சனம்பட்டி - திண்டுக்கல்
மூன்றாம் ஆண்டு
குருபூஜை பெருவிழா அழைப்பிதழ்
அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான குரோதி வருடம் சித்திரை மாதம் 22-ஆம் நாள் (05.05.2024)
ஞாயிற்றுக்கிழமை துவாதசி திதியும் உத்திரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில்
அருள்மிகு சித்தர் பெருமான் ஐயா பாக்கியநாதன் (எ) ஸ்ரீலஸ்ரீ பிச்சை சுவாமிகள்
என்ற பொடிமட்டை சுவாமிகளின் 3-ம் ஆண்டு குருபூஜை விழா
சிறப்பாக நடைபெற இருப்பதால் பக்தகோடிகள் அனைவரும் கலந்துகொண்டு
குருவருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.
நிகழ்ச்சி நிரல்
காலை 4.30 மணி - 6.00 மணி
மகா கணபதி ஹோமம்
காலை 10.30 மணி - 11.00 மணி
சுவாமிக்கு அபிஷேக ஆராதனை
பிற்பகல் 11.30 மணி
சாதுக்களின் மகேஷ்வர பூஜை
மதியம் 01.00 மணி
மகா அன்னதானம்
இங்ஙனம் :
பத்மாவதி (துணைவியார்)
P. பாரதி (மகள்)
பக்தர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள், குஞ்சனம்பட்டி.
செல் : 6369887980, 9980180460, 9543395007
பஸ்ரூ 6B : திண்டுக்கல் to கன்னிவாடி வழி : மயிலாப்பூர், கோனூர் பிரிவு
பேருந்து நிருத்தம் : குஞ்சனம்பட்டி கோனூர் பிரிவு, சாய்பாபா கோவில் எதிர்புறம்




குருவே சரணம்
சித்தர் தேசம்
ஆன்மீக யாத்திரை சேவா
சித்தர் தேசம்
ஆன்மீக யாத்திரை சேவா, சென்னை
(சித்தர்கள் மகான்கள் ஜீவசமாதி தரிசன யாத்திரைக்குழு)
3 நாள் சிறப்பு யாத்திரை
ஈரோடு, திருப்பூர், நாமக்கல் மாவட்ட சித்தர்கள் மகான்கள்
புராதனகோவில்கள், முருகப்பெருமான் அருள் பாலிக்கும்
மலை கோயில்கள், சக்தி பிடங்கள் தரிசனம்
இந்த சித்தர் குகைக்கு வந்தாலே
ஆனந்த அருள் தரும்
செட்டி தம்பிரான் சாமி
நல்லது நடக்கும்
ஸ்ரீ கொங்கண சித்தர்
மௌன சித்தர்
கே. பாஸ்கரன்
தொடர்புக்கு : 9600071277, 9884378131




மூன்று நாள் சிறப்பு யாத்திரை
ஈரோடு,திருப்பூர், நாமக்கல் மாவட்ட
சித்தர்கள் மகான்கள் ஜீவசமாதி
புராதனகோவில்கள், முருகப்பெருமான்
அருள் பாலிக்கும் மலை கோயில்கள்,
சக்தி பிடங்கள் தரிசனம்
புறப்படும் நாள் 25.04.2024
வியாழன் அன்று இரவு
சென்ட்ரல் ரயில்
நிலையத்தில் இருந்து
இருந்து புறப்படுகிறோம்
தரிசன நாள்கள்
26.04.2024 வெள்ளிக்கிழமை
27.04.2024 சனிக்கிழமை
28.04.2024 ஞாயிற்றுக்கிழமை
ஆகிய மூன்று நாட்களும்
முழுவதும்
கட்டணம்: 3900/-
உணவு
குழுவாக
தங்கும் இடம்
உட்பட
கொங்கு நாட்டில் ஆதி சித்தன்
முருகப்பெருமான் அருள்பாலிக்கும்
மலைகோயில்கள் தரிசனம்
பக்தர்கள் வசதிக்காக மலைக் கோவில்கள்
அனைத்தையும் வாகனத்திலேயே பயணம்
செய்து தரிசிக்கலாம்
பவள மலை
முருகன்
பச்சை மலை
தொடர்புக்கு : K.பாஸ்கரன்
செல் : 9600071277, 9884378131, 7397478131

# சிவாலயத்திற்க்கு பூமிதானம் செய்யுங்கள்

தமிழக்கத்தில் உள்ள ஏனைய கோவில்களின் கல்வெட்டுக்களை நீங்கள் படித்தீர்களானால் அந்தந்த கோவில்களின் நீண்ட வரலாறு புரியும். தமிழகத்தை ஆண்ட சேர சோழ பாண்டிய வம்சாவழி முடி சூடா மன்னர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்தில் செய்த அறப்பணிகளை கல்வெட்டுக்களின் மூலம் இந்த உலகிற்க்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் செய்த தான -தர்ம காரியங்கள் யாவும் இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டவை.


இவர்கள் பொன் தானம், மண் தானம், அன்னதானம், கோதானம் கோவிலுக்கு பொருள் தானம் இப்படி தானங்களை வாரி வழங்கி வரலாற்றில் நீங்கா இடம்பெற்றனர். அவர்களின் ஆன்மாக்களும் இறைவனடி சேர்ந்து வீடுபேறு பெற்றனர்.

மன்னர்களுக்கு இணையாக குடிமக்களும் கோவிலுக்கு தேவையான பொருட்களை தானமாக தந்து இறைவனின் அருட்கடாசத்தினை பெற்றனர். இவ்வாறு கொடுக்கும் தானத்தின் மூலம் தனது ஏழு பிறவிகளிலும் செய்த மகாபாவங்களும் மற்றும் தனது குடும்பத்தாரின் பாவங்களிலிருந்தும் ஒருசேர விமோசனத்தை பெற்றுவந்தனர்.

சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் சார்பாக நிர்மாணிக்க உள்ள மிகப்பெரிய சிவாலயம் மற்றும் *18* சித்தர் பீடங்கள் கொண்ட திருக்கோவிலின் புண்ணிய பூமியை வாங்குவதற்க்கு தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருக்கிறது. கடந்த *2* மாதங்களாக கோவில்களின் நகரமாம் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் பகுதிகளில் கோவிலுக்கான இடம் தேர்வு செய்யபட்டுள்ளது. அறக்கட்டளையின் ஒவ்வொரு நன்கொடையாளரும் தங்களால் இயன்ற அளவு பொருளாதாரத்தின் அடிப்படையில் நிலத்தின் அளவிற்க்கான தொகையை நன்கொடையாக அறக்கட்டளையின் வங்கிக்கணக்கிகிற்க்கு அனுப்பி வைக்கலாம். நீங்கள் அனுப்பும் நன்கொடைக்கு, *Income Tax Act rule 80G* -ன்படி வரிவிலக்கு உண்டு.

சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி இந்த மிகப்பெரிய சிவாலயத்தை எழுப்ப முனைப்பெடுத்திட வேண்டும். மேலும், இந்த ஆலயம் எழுப்ப பூமி தானம் செய்த அனைத்து நன்கொடையாளர்களின் பெயரும் நீண்ட நெடிய கல்வெட்டின் மூலம் அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு காலம் காலமாக அவர்களின் புகழ் ஓங்கி இருக்கவேண்டி சித்தர்கள் திருவடி சேவா அறக்கட்டளையின் சார்பாக அதனை ஆலயத்தின் முகப்பில் பதிக்கப்படும்.

மேலும் ஆலயத்திற்கான "**பூமிதானம் நன்கொடை**" பற்றி அறிந்துகொள்ளவும் அல்லது உங்களுடைய நன்கொடையை அறக்கட்டளையின் *+91 8438238921* என்ற *G-Pay / PayTM* எண்ணிற்க்கு அனுப்பி வைக்கவும்.
தானம் செய்து ... பாவங்களை தீர்த்து ... பூர்வ புண்sணியத்தை அடைவீர் ...






*The proposed site is identified at Poovalai Village Near Arambakkam in Gummidipoondi Taluk, Thiruvallur District around 2.5 Acres of Land with small building for "Siddhargal Thiruvadi Seva Trust"*




**( You can get Income Tax Relief of your DONATION under 80G )**